www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

V10T

விருதுநகர் மாவட்டப் பொதுத் தேர்வுகள்
மூன்றாம் திருப்புதல் தேர்வு - பிப்ரவரி 2023

வகுப்பு 10

கால அளவு: 3.00 மணிநேரம் | தமிழ் | மதிப்பெண்கள்: 100

பகுதி -1 (மதிப்பெண்கள்-15) 15×1=15

i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1) 'சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி' என்னும் அடியில் பாக்கம் என்பது .....
அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்

2) செய்தி 1 - ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 15 ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.
செய்தி 2 - காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாமிடம் என்பது எனக்குப் பெருமையே.
செய்தி 3 - காற்றின் ஆற்றலைப் பயன்படுத்திக் கடல் கடந்து வணிகம் செய்து அதில் வெற்றி கண்டவர்கள் தமிழர்கள்!
அ) செய்தி 1 மட்டும் சரி ஆ) செய்தி 1, 2 ஆகியன சரி
இ) செய்தி 1, 3 ஆகியன சரி ஈ) செய்தி 3 மட்டும் சரி

3) 'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என்னும் சின்னமனூர் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி .....
அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
ஆ) காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
இ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.
ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

4) வாய்மையே மழைநீராவி - இத்தொடரில் வெளிப்படுத்தும் அணி .....
அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம் இ) உருவகம் ஈ) தீவகம்

5) மலர்கள் தரையில் நழுவும் - எப்போது?
அ) அள்ளி முகர்ந்தால் ஆ) தளரப் பிணைத்தால்
இ) இறுக்கி முடிச்சிட்டால் ஈ) காம்பு முறிந்தால்

6) எய்துவர் எய்தாப் பழி - இக்குறளடிக்குப் பொருள் வாய்பாடு எது?
அ) கூவிளம் தேமா மலர் ஆ) கூவிளம் புளிமா நாள்
இ) தேமா புளிமா காசு ஈ) புளிமா தேமா பிறப்பு

7) 'காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்' நிலத்துக்கு நல்ல உரங்கள்-இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது .....
அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும்
இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்

8) தொடரைப் படித்து விடையைத் தேர்க.
மீன் இருப்பது நீரில் தேன் இருப்பது
அ) வண்டில் ஆ) பூவில் இ) கற்றலில் ஈ) கருவில்

9) 'பெப்பர்' என்னும் இயந்திர மனிதனை உருவாக்கிய நாடு .....
அ) அமெரிக்கா ஆ) சீனா இ) ஜப்பான் ஈ) இந்தியா

10) 'அமைச்சர் நாளை விழாவிற்கு வருகிறார்'-இத்தொடர் எவ்வகை வழுவமைதி?
அ) கால வழுவமைதி ஆ) மரபு வழுவமைதி
இ) இட வழுவமைதி ஈ) திணை வழுவமைதி

11) 'பழமைக்கு எதிரானது - எழுது கோலில் பயன்படும்' - என்ற புதிருக்கான விடையைத் தேர்க.
அ) இளமை ஆ) கருமை இ) புதுமை ஈ) வளமை

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.

'விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்லக்
கரு வளர் வானத்து இசையில் தோன்றி,
உரு அறிவாரா ஒன்றன் ஊழியும்;
உந்து வளி கிளர்ந்த ஊழி ஊழ் ஊழியும்

Kindly send me your questions and answer keys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

12) இப்பாடல் இடம்பெறும் நூல் .....
அ) நீதிவெண்பா ஆ) பரிபாடல்
இ) பெருமாள் திருமொழி ஈ) முல்லைப்பாட்டு

13) இப்பாடலில் இடம் பெறும் அடியெதுகையை எடுத்து எழுதுக.
அ) ஊழியும் - ஊழியும் ஆ) வளி - ஊழி
இ) ஊழ் - ஊழ் ஈ) கரு - உரு

14) 'விசும்பு' என்ற சொல் தரும் பொருள் .....
அ) வானம் ஆ) காற்று இ) அலை ஈ) நுனி

15) 'ஊழ் ஊழ்' - என்பதன் இலக்கணக் குறிப்பு .....
அ) இரட்டைக் கிளவி ஆ) வினைத்தொகை
இ) அடுக்குத் தொடர் ஈ) பண்புத்தொகை

பகுதி -II (மதிப்பெண்கள்-18)

பிரிவு - 1

4×2=8

குறிப்பு : எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. வினா எண் 21-க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

16) விடைகளுக்கு ஏற்ப வினாக்கள் அமைக்க.
அ) திராவிட மொழிகளின் ஒப்பியல் இலக்கணம் என்னும் நூலை எழுதியவர் கால்டுவெல்
ஆ) மொழிப்பெயர்ப்பைக் கல்வியாக ஆக்குவதன் மூலம், அனைத்துலக அறிவையும் நாம் எளிதாகப் பெற முடியும்.

17) குறிப்பு வரைக - அவையம்

18) வசன கவிதை - குறிப்பு வரைக.

19) 'காய்மணி யாகு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன்' - உவமை உணர்த்தும் கருத்து யாது?

20) வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.

21) 'வினை' - என முடியும் திருக்குறளை எழுதுக.

பிரிவு - 2

5×2=10

குறிப்பு : எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. வினா எண் 21-க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

22) தனிச் சொற்றொடர்களாக மாற்றுக.
ஓடிக் கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றவுடன், அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைப்பட்டது.

23) தண்ணீர் குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைநிலைத் தொடர்களை விரித்து எழுதுக. தொடரில் அமைக்க.

24) 'பதிந்து' - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

25) பொருத்தமான திருத்தக் குறியிடுக.
சேரர்களின் பட்டப் பெயர்களில் கொல்லி வெற்பன் மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை கொல்லி மலையை வென்றவன் கொல்லி வெற்பன் எனவும் பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள் மலையமான் எனவும் பெயர் சூட்டிக்கொண்டனர் இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.

26) கலைச் சொற்கள் தருக.
அ) Modern Literature ஆ) Bio technology

27) தீவக அணியின் வகைகள் யாவை?

28) சந்தக் கவிதையில் வந்த பிழைகளைத் திருத்துக.

'தேனிலே ஊரிய செந்தமிழின் - சுவை
தேரும் சிலப்பதி காறமதை
ஊனிலே எம்முயிர் உல்லலவும் - நிதம்
ஓதி யுனர்ந்தின் புருவோமே'

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

பகுதி -III (மதிப்பெண்கள்-18)

பிரிவு - 1 2×3=6

குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.

29) **பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

பருப்பொருள்கள் சிதறும் படியாகப் பல ஊழிக் காலங்கள் கடந்து சென்றன. புவி உருவானபோது நெருப்பு பந்து போல் விளங்கிய ஊழிக்காலம் தோன்றியது. பின்னர்ப் புவி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக்காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது. இப்படி மீண்டும் மீண்டும் சிறப்பாகிய ஆற்றல் மிகுந்து செறிந்து திரண்டு இப்படியாக (வெள்ளத்தில் மூழ்குதல்) நடந்த இந்த பெரிய உலகத்தில், உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது. உயிர்கள் தோன்றி நிலை பெறும் படியாக இப்பெரிய புவியில் ஊழிக்காலம் கடந்தது.

1. புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது?
2. இப்பத்தி உணர்த்தும் அறிவியல் கொள்கை யாது?
3. உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாக நீவிர் கருதுவன யாவை?

30) இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்து சிந்தனைகளை முன் வைத்து எழுதுக.

31) ஜெயகாந்தன் தம் கதைமாந்தர்களின் சிறந்த கூறுகளைக் குறிப்பிடத் தவறுவதில்லை என்று அசோகமித்திரன் கூறுகிறார். இக்கூற்றை மெய்பிக்கும் செயல் ஒன்றைத் 'தர்க்கத்திற்கு அப்பால்' கதை மாந்தர் வாயிலாக விளக்குக.

பிரிவு - 2 2×3=6

குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். வினா எண் 34 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

32) 'முதல் மழை விழுந்ததும்' என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா. கவிபாடுகிறார்?

33) மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்புச் செய்தது ஏன்? விளக்கம் தருக.

34) அடிபிறழாமல் எழுதுக.

அ) 'அருளைப் பெருக்கி' எனத் தொடங்கும் நீதிவெண்பா பாடல்.

ஆ) 'வெய்யோனொளி' எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடல்.

பிரிவு - 3 2×3=6

குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.

35) 'முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை இன்மை புகுத்தி விடும்' - இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி விளக்குக.

36) தீவக அணியைச் சான்றுடன் விளக்குக.

37) 'கரப்பிடும்பை இல்லாரைக் காணின் நிரப்பிடும்பை
எல்லாம் ஒருங்கு கெடும்' - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

பகுதி -IV (மதிப்பெண்கள்-25)

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 5×5=25

38) அ) **காலக் கணிதம் கவிதையில் பொதிந்துள்ள நயங்களைப் பாராட்டி எழுதுக.**

கவிஞன் யானோர் காலக் கணிதம்
கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்!
புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்
பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்!
இவை சரி யென்றால் இயம்புவதென் தொழில்
இவைதவ றாயின் எதிர்ப்பதென் வேலை!
ஆக்கல் அளித்தல் அழித்தல் இம் மூன்றும்
அவனும் யானுமே அறிந்தவை; அறிக!

- கண்ணதாசன்

(அல்லது)

ஆ) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோப்பலை அழகுற விவரித்து எழுதுக.

39) அ) மாநில அளவில் நடைபெற்ற 'மரம் இயற்கையின் வரம்' எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

(அல்லது)

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

ஆ) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

40) **காட்சியைக் கண்டு கவினுறு எழுதுக.**

41) எண் -10, வள்ளலார் தெரு, மதுரை மாவட்டத்தில் வசிக்கும் குருசாமியின் மகன் பரத், கணினிப் பயிற்றுநர் பணி வேண்டி தன்விவரப் பட்டியலை நிரப்புகிறார். தேர்வர், தம்மை பரத்தாகப் பாவித்து பணி வாய்ப்பு வேண்டி தன்விவரப் பட்டியலை நிரப்புக.

42) அ) இன்சொல் வழியின் நன்மைகளையும், தீய சொல் வழியின் தீமைகளையும் பட்டியலிடுக.

(அல்லது)

ஆ) **மொழிபெயர்க்க.**

Therukoothu is as its name indicates, a popular form of theatre performed in the streets. It is performed by rural artists. The stories are dervied from epics like Ramayanan, Mahabhratha and other ancient puranas. There are more songs in the play with dialogues improvised by the artists on the spot. Fifteen to twenty actors with a small orchestra forms a Koothu trouple. Though the orchestra has a singer, the artists sing in their own voices. Artistes dress themselves with heavy castumes and bright makeup. Koothu is very popular among rural areas.

பகுதி -V (மதிப்பெண்கள்-24)

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும். **3x8=24**

43) அ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

(அல்லது)

ஆ) ஜெயகாந்தன் நினைவுச் சிறப்பிதழை, வார இதழ் ஒன்று வெளியிட இருக்கிறது. அதற்கான ஒரு சுவரொட்டியை வடிவமைத்து அளிக்க.

44) அ) இராமானுசர் நாடகத்தினை சுருக்கிக் கதையாக எழுதுக.

(அல்லது)

ஆ) 'கற்கை நன்றே கற்றை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே' என்கிறது வெற்றி வேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம். அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச்சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளைக் குறிப்பிடுக.

45) அ) **மனித நேயமிக்க ஆளுமை ஒருவருக்கு குறிப்புகளைப் பயன்படுத்தி நினைவிதழ் ஒன்று உருவாக்குக.**

முன்னுரை - என் இளமைப் பருவம் - விடுதலைப் போராட்டத்தில் நான் - பொது நலமே தன்னலம் - எளிமையே அறம் - நாட்டின் முன்னேற்றமே நோக்கம் - எளியோரின் அன்பே சொத்து - முடிவுரை.

(அல்லது)

ஆ) **குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று தருக.**

முன்னுரை - விண்வெளியில் தமிழரின் அறிவு - கல்பனா சாவ்லா - விண்ணியல் அறிவில் - வருங்காலத்தில் மேற்கொள்ள வேண்டியவை - முடிவுரை.

- - - - -

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com